DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.274/2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பரமானந்தன் |
| Father's / Husband Name | : | சுருளி |
| Village | : | கம்பம் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of May 2026.

புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியும். கடந்த 2023 ஜனவரி மாதம் ரூபாய் ஒரு லட்சம் புகார்தாரரிடம் வட்டிக்கு பணம் வாங்கினேன்.அதற்கு ஆதரவாக இரண்டு காசோலைகளை புகார்தாரரிடம் கொடுத்தேன்.மாதம்வட்டி 5000 ரூபாய் ஆகும். சில மாதங்கள் மட்டும் என்னால் வட்டி செலுத்த முடியவில்லை. 2024 பிப்ரவரி மாதம் நான் புகார்தாரருக்கு வட்டி மற்றும் அசல் தொகை முழுவதையும் செலுத்தி விட்டேன். நான் கொடுத்த காசோலைகளை கேட்டபோது அவர் தர மறுத்து விட்டார். மேற்கொண்டு முப்பதாயிரம் பணம் புகார்தாரர் கேட்டார். நான் ஒரு மாதம் புகார்தாரரை நேரில் சந்தித்து காசோலை கேட்டும் அவரிடம் காசோலை பெறமுடியவில்லை.18.06.2025 நான் பணம் வாங்கியதாக கூறி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது.

2. மேற்படி தேதியில் நான் புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை.

மேற்படி தேதியில் நான் புகார்தாரரை சந்திக்கவும் இல்லை. அவரிடம் காசோலையை மேற்படி தேதியில் கொடுக்கவில்லை. M.P.M. முத்தையா பிள்ளை நினைவு மேல் பள்ளியில் காவலராக உள்ளேன். காலை 06.00 மணியளவில் நான் பள்ளிக்கு சென்று விடுவேன். 18.06.2025 ம் தேதியன்று நான் பள்ளிக்கு சென்றேன். மேற்படி தேதியில் **நான் பள்ளிக்கு சென்றதற்கான வருகை பதிவேட்டினை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் எ.சா.ஆ.1 ஆகும்.** நான் பள்ளிக்கு காலை 06.00 மணிக்கு சென்று இரவு 07.00 மணியளவில் பள்ளியிலிருந்து கிளம்புவேன்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

J.M, F.T.C(M.L),Uthamapalayam